ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1819/44 - 2013 ජූලි මස 19 වැනි සිකුරාදා - 2013.07.19

*1819/44 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவைப் பிரமாணக் குறிப்பு

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013, ஏப்பிறல் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை 1804/50 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு தொடர்பான அறிவித்தலில் பின்வரும் திருத்தங்களைச் செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளது.*

| பந்தி இல. | உத்தேச திருத்தம் |
|---|---|
| 19.3 (i) | இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் இச்சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் காணப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் வகுப்பு II தரம் II, வகுப்பு II தரம் I மற்றும் இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் வகுப்பு II இலுமாக மொத்தமாக 13 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல், அச்சேவைக் காலப் பகுதியில் தரம் II இல் மூன்று (03) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் வேண்டும். |

**குறிப்பு :**

இங்கு தரம் II இல் மூன்று (03) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்காலம் என்பது

(1) முன்னர் நடைமுறையில் இருந்த சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க வகுப்பு II தரம் I இல் மூன்று (03) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை ; அல்லது

(2) புதிய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க தரம் II இல் மூன்று (03) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தை ; அல்லது

(3) மேலே (1) மற்றும் (2) இல் கூறப்பட்ட சேவைக் காலங்களின் கூட்டுத்தொகை மூன்று (03) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை குறிக்கும் என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| 19.3 (ii) | இச்சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் காணப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பில் கூறப்பட்டுள்ள முதலாம், இரண்டாம் திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடைந்திருத்தல். |
| 19.4 இன் குறிப்பு: | மேலே 19.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கு இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் II - II ஆம் தரங்களிலிருந்து உயர் தரங்களில் இருபத்தைந்து (25) வருடங்கள் செயலூக்கமிக்க சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் அதற்கு |

*பந்தி இல.* *உத்தேச திருத்தம் (தொடர்ச்சி)*

*11.3. 1 (i) ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பட்டப்பின் பட்டம் ஒன்றைப் பெறுதல் வேண்டும் என்ற தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுவர். இச்சலுகையானது 2012.10.01 முதல் 2015.12.31 ஆந் திகதி வரை நடைமுறையில் இருக்கும்.*

*2016.01.01 ஆந் திகதி முதல் 2018.01.01 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் விசேட தரத்தில் ஏற்படும் பதவி வெற்றிடங்களுக்கு தரமுயர்த்தும் போது நிதி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் மத்தியஸ்தர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும் எழுத்துருவிலான ஆய்வுக் கட்டுரையொன்றைச் சமர்ப்பிக்கும் அலுவலர்கள் 11.3.1 (i) ஆம் உறுப்புரையில் கூறப்பட்டுள்ள பட்டப்பின் பட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுவர்.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,*

*ரீ. எம். எல். சீ. சேனாரத்ன,*
*செயலாளர்,*
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

*2013, யூலை 19.*

*8 - 219*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.